அல்லது இரண்டு ரூபாயாக இருந்தாலும் சரி. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரிவாங்குவதை வாகனம் வாங்கும்போது வசூலிப்பதா அல்லது வரி வாங்கும்போது வசூலிப்பதா என்பது பிரச்சினை. இது நடைமுறைகளுக்கு உகந்த காரியமல்ல. கொஞ்சம் கொஞ்சமாக, சிறுகச் சிறுக வரி வாங்குவது, வரி விதிப்பிற்கே ஒரு இலக்கணமாகும்.

ஆலந்தூர் சாலை தரைப்பாலம்.

91—(* வினா எண் 13403)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் சாலை தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றி அமைக்க பணிகள் கால தாமதம் ஆகக் காரணம் என்ன?

(ஆ) பணி எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னை மாநகராட்சியின் 300-வது ஆண்டு விழாவை ஒட்டி ஆலந்தூர் சாலை தரைப் பாலத்திற்கு மாறாக உயர் மட்டப் பாலம் கட்டுவதற்கான திட்டம் தோராயமாக ரூ. 200 இலட்சத்துக்கு மதிப்பிடப்பட்டு நிதி ஒதுக்கீட்டுக்கு சென்னை மாநகராட்சி அரசுக்கு எழுதியுள்ளது. இது தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசு நிதி ஒதுக்கீடு செய்த பின்பு இப்பணி தொடங்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பரிசீலனையை விரைந்து முடித்து, 300-வது ஆண்டில் அந்தத் திட்டப் பணிகளைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும், அந்தச் சாலை மிக முக்கியமான கிண்டி தொழிற் பேட்டையை இணைக்கின்ற சாலையாக இருப்பதால், அந்தப் பகுதியில் ஒரு நாளைக்கு 10,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது ஜாபர்கான் பேட்டை தரைப் பாலத்தையும், ஆலந்தூர் சாலையையும் இணைக்கின்ற இரண்டு தரைப் பாலங்களும் மழைக் காலங்களில் செல்லமுடியாத நிலையிருக்கிறது. எனவே அதைக் கருத்திற்கொண்டு, 300-வது ஆண்டில் பரிசீலனை என்ற அளவில் இல்லாமல் கொள்கை முடிவாக எடுத்து, நடவடிக்கை எடுப்பார்களா?

1987 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்டுகின்ற திட்டம் ஒன்று மாத்திரம் அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்படவில்லை. 300-ஆவது ஆண்டையொட்டி சென்னை மாநகராட்சி பல திட்டங்களை நிறைவேற்றும்பொருட்டு அனுப்பியிருக்கிறது. அதற்காக குறைந்தபட்சம் ரூ. 300 கோடி தேவைப்படுகிறது. அதிலே ஒன்றுதான் இந்தப் பாலத் திட்டமும். பொதுவாக எல்லாத் திட்டங்களையும் பரிசீலிக்க வேண்டிய பொறுப்பும், சூழ்நிலையும் அரசுக்கு இருக்கிறது. அதிலே ஒரு திட்டமாக இது இருக்கின்ற காரணத்தால், எல்லாத் திட்டங்களையும் பரிசீலித்து, அதிலே உடனடியாக நிறைவேற்றுவதற்குரிய திட்டம் எது என்று முன்னுரிமை கொடுக்கின்ற சூழ்நிலைகளில் அரசு இதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

இலங்கை அகதிகளுக்கு வீடுகள் கட்ட பண உதவி.

92—(*வினா எண் 13528)—திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கள்ளியங்காட்டில் உள்ள சிலோன் காலனியில் வசிக்கும் இலங்கை அகதிகள் அரசு வழங்கிய கடனில் கட்டிய வீடுகள் அரை குறையாக இருப்பவைகளை முழுமையாகக் கட்டி முடிக்க அவர்களுக்குப் பண உதவி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கல்குளம் தாலுக்காவைச் சேர்ந்த ஆரூர் கிராமத்தில் உள்ள பனவிளை (கள்ளியங்காடு) என்னும் இடத்தில் 27 இலங்கை அகதி குடும்பங்களுக்கு ஏற்கெனவே வீட்டுக் கடன் வழங்கப்பட்டு விட்டது. இவர்களுக்குக் கூடுதல் கடன் எதுவும் வழங்க பிரேரணைகள் எதுவும் நிலுவையில் இல்லை.

(ஆ) எழவில்லை.